**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.142/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.18** |
| Name | : | **பழனிவேல்** |
| Father's/Husband Name: | : | சுப்புகவுண்டர் |
| Address : | : | எ.மேட்டூர், கோரையாறு, தொண்டமாந்துறை, வேப்பந்தட்டை |
| Age | : | 60/2021 |

<u>தேதி: 21/10/2021</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மலையாளப்பட்டி, அரும்பாவூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு மேற்கண்ட முகவரியில் வசித்து வந்தேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு தொண்டமாந்துறை கூட்டுறவு சொஸைட்டியில் வங்கியில் அப்போது கணக்கு இருந்தது. தற்போது கணக்கு இல்லை. அந்த வங்கி கணக்கு எண். 806. உறுப்பினர் எண். 2745. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இந்த பாஸ் புத்தகம் என்னுடையது தான். அந்த பாஸ் புத்தகம் **அ.சா.ஆ.**23. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் கையொப்பமிடுவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் சொஸைட்டிக்கு வரவு, செலவு செய்ய செல்லும் போது, அங்கு பணிபுரியும் நபர்கள் யாரேனும் ஒருவர் படிவங்களை பூர்த்தி செய்து கொடுப்பார்கள். நான் கையொப்பம் மட்டும் போடுவேன். தற்போது என்னிடம் காட்டப்படும்

20/09/1996 ரூ.9200/- செலுத்தியதற்கான செலானில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. இந்த முறைகேடு சம்மந்தமாக என்னை கூட்டுறவு சங்கத்தின் விசாரணை அதிகாரி விசாரித்தார். அவ்வாறு விசாரிக்கப்பட்ட போது என்னிடம் பெறப்பட்ட இந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.24.** இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், அவர்களது வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்றும், வழக்கறிஞர் போனை எடுக்கவில்லை என்றும் கூறியதால் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.142/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.17** |
| Name | : | **ரெங்கசாமி** |
| Father's/Husband Name: | : | ராமசாமி |
| Address : | : | அன்னமங்கலம், வேப்பந்தட்டை |
| Age | : | 57/2021 |

<u>தேதி: 21/10/2021</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

**நீதிமன்ற கேள்வி :**

1.தங்கள் பெயர் என்ன?

ரெங்கசாமி

2. தங்களுக்கு காது நன்றாக கேட்குமா?

என்னிடம் கொஞ்சம் மெதுவாக கேட்டால் நான் சரியாக பதில் சொல்வேன்.

3. எனக்கு எதனால் காது கேட்கவில்லை என்றால் நரம்பு கோளாறு சம்மந்தமாக கேட்கவில்லை. ஆனால் இடது பக்க காது கேட்கும்.

மேற்கண்ட கேள்விகள் நீதிமன்றத்தால் கேட்கப்பட்டு சாட்சி அதை கேட்டு பதில் சரியாக கூறியதால் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அன்னமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு தொண்டமாந்துறை கூட்டுறவு சொஸைட்டியில் வங்கி கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கு எண். 755. உறுப்பினர் எண். 2697. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இந்த பாஸ் புத்தகம் என்னுடையது தான். அந்த பாஸ் புத்தகம் **அ.சா.ஆ.**21. எனக்கு அதிகமாக எழுதப்படிக்க தெரியாது. ஆனால் எனக்கு ஓரளவிற்கு பஸ் போர்டுகளை வாசிக்க தெரியும் மற்றும் நான் கையொப்பமிடுவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் சொஸைட்டிக்கு வரவு, செலவு செய்ய செல்லும் போது, அங்கு பணிபுரியும் செல்லப்பிள்ளை படிவங்களை பூர்த்தி செய்து கொடுப்பார். நான் கையொப்பம் மட்டும் போடுவேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 20/08/1996 ரூ.2700/- செலுத்தியதற்கான செலானிலும் மற்றும் 20/08/1997 தேதியிட்ட ரூ.5100/- எடுக்கப்பட்டதற்கான ரசீதிலும் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. இந்த முறைகேடு சம்மந்தமாக என்னை கூட்டுறவு சங்கத்தின் விசாரணை அதிகாரி விசாரித்தார். அவ்வாறு விசாரிக்கப்பட்ட போது என்னிடம் பெறப்பட்ட இந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.**22. இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தனரா என எனக்கு தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், அவர்களது வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்றும், வழக்கறிஞர் போனை எடுக்கவில்லை என்றும் கூறியதால் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

MJ-I, Pbr

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.142/2017 |
| Prosecution Witness | : | அ.சா.16 |
| Name | : | **சோமசுந்தரம்** |
| Father's/Husband Name: | : | ராமசாமி |
| Address : | : | சரவணபட்டி, கோயமுத்தூர் |
| Age | : | 82/2021 |

<u>தேதி: 21/10/2021</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது கோயமுத்தூர் சரவணபட்டியில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் சொந்த ஊரான தொண்டமாந்துறை விஜயாபுரம் காட்டுக்கொட்டகையில் வசித்து வந்தேன். அந்த சமயத்தில் நான் விவசாயம் செய்து வந்தேன். எனக்கு தொண்டமாந்துறை கூட்டுறவு சொஸைட்டியில் வங்கி கணக்கு இருந்தது. அந்த வங்கி கணக்கு எண். 259. உறுப்பினர் எண். 1338. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இந்த பாஸ் புத்தகம் என்னுடையது தான். அந்த பாஸ் புத்தகம் **அ.சா.ஆ.**14. எனக்கு தமிழ் மட்டும் எழுதப்படிக்க தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் சொஸைட்டிக்கு வரவு, செலவு செய்ய செல்லும் போது, அங்கு பணிபுரிபவர்கள் படிவங்களை பூர்த்தி செய்து கொடுப்பார். தற்போது என்னிடம் காட்டப்படும் 12/04/1996, 15/04/1996, 19/04/1996,

20/04/1996 மற்றும் 23/04/1996 தேதிகளில் நான் வங்கி கணக்கில் ரூ.3000/- ரூ.10000/-, ரூ.3500/-, ரூ.5000/- மற்றும் ரூ.5000/-முறையே செலுத்தியதற்கான செலான்களில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.19.** என்னிடம் காண்பிக்கப்படும் 16/12/1996 தேதியிட்ட ரூ.2600/- செலுத்தப்பட்டதற்கான செலானில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. 16/10/1997 தேதியிட்ட ரூ.250/-ஐ எடுத்ததற்கான ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. இந்த முறைகேடு சம்மந்தமாக என்னை கூட்டுறவு சங்கத்தின் விசாரணை அதிகாரி விசாரித்தார். அவ்வாறு விசாரிக்கப்பட்ட போது என்னிடம் பெறப்பட்ட இந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.20.** இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தனரா என எனக்கு நினைவில்லை.

**குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், அவர்களது வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்றும், வழக்கறிஞர் போனை எடுக்கவில்லை என்றும் கூறியதால் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

Draft